1991 சனவரி 22]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல தற்போது இத்திட்டம் அமலில் இல்லை.

10-05 மணி

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு உண்மையிலேயே பலன்தரக்கூடிய இந்த ஆழ்துளைக் குழாய் அமைக்கும் திட்டத்தை அரசு இப்போது நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறுகிறார்களே, இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு மிக மிக முக்கியமான திட்டம் என்பதால் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கக்கூடிய பகுதியிலே இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு இல்லை.

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் பல இருந்த போதிலும், சேலம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 60 சதவீதம் மழைக் குறைவினால் இப்போதே கடுமையான வறட்சி நிலவுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரம் அமைச்சர் அவர்களுக்கும் கிடைத்திருக்கும். ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் வறண்டு போகக் கூடிய சூழ்நிலையையும் நீங்கள் அறிவீர்கள். எனவே இந்த வறட்சியைப் போக்குகிற வகையிலே உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தகவலைத் தெரிவித்து, அதிலிருந்து பரிகாரம் தேடலாம்.

*** விவசாயப் பண்ணை அமைத்தல்**

*** 11261 திரு. ரெ. பிச்சைமுத்து** :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் கேட்ட வினா பெரம்பலூர் வட்டத்தில் விவசாயப் பண்ணை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா என்பது. அதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. அதனால் விவசாயிகளுக்கு இடு பொருள் கிடைப்பது சம்பந்தமாகவும் அவர்களுடைய மேம்பாட்டையும் கருதித்தான் அங்கே விவசாயப் பண்ணை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று நான் கேட்டேன். ஆகவே அது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, அங்கு அமைக்கப்படாது என்பதற்குத்தான் இல்லை என்று பதில் சொன்னேன். தமிழ்நாட்டில் 44 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெய்க்குப்பைப்புதூர், புதூர்ப் பாளையம், இனங்கூர் ஆகிய மூன்று இடங்களில் அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. நெய்க்குப்பைப்புதூரிலே 29.70 ஏக்கரும், புதூர்ப்பாளையத்திலே 60.80 ஏக்கரும், இனங்கூரில் 111.20 ஏக்கரும், மொத்தம் 201.70 ஏக்கர்கள் இந்தப் பண்ணைகளிலே இருக்கின்றன. லால்குடிக்குப் பக்கத்திலே 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த நெய்க்குப்பைப்புதூர் பண்ணை பெரம்பலூருக்குப் பக்கத்திலே இருக்கிறது. ஆகவே புதியதாக ஒரு பண்ணையை ஏற்படுத்தத் தேவையில்லை.

பசுந்தாள் உர விதைகள்.

*11461. திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசுந்தாள் உர விதைகள் வேளாண் கிடங்குகளில் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?